# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## செய்தி குறிப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவிக்கை எண் 05/2018 நாள் 28.02.2018 ன் படி அறிவிக்கப்பட்ட ஒருங்கிணைந்த பொறியாளர் பணியிலடங்கிய உதவிப் பொறியாளர் பதவிகளுக்கான தேர்வினை காஞ்சிபுரம் உள்ளிட்ட 15 மாவட்ட தேர்வு மையங்களில் 20.05.2018 அன்று நடத்தியது. அதில் காஞ்சிபுரம் எஸ்.எஸ்.கே.வி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 20.05.2018 அன்று முற்பகல் ஒரே ஒரு தேர்வு அறையில் மட்டும் 16 தேர்வர்களுக்கு Electronic Communication Engineering வினாத்தாளுக்கு பதிலாக Electrical Engineering வினாத்தாள் தவறுதலாக மாற்றி வழங்கப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. இதனை விசாரித்த தேர்வாணையம் பாதிக்கப்பட்ட 16 விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் வருகிற ஞாயிறு (27.05.2018) அன்று மறுதேர்வு நடத்த முடிவு செய்துள்ளது. பாதிக்கப்பட்ட 16 விண்ணப்பதாரர்களுக்கும் இதுகுறித்த விவரம் தனியே குறுஞ்செய்தியாகவும், மின்னஞ்சலாகவும் அனுப்பப்பட்டுள்ளது. இதுகுறித்து சந்தேகம் ஏதேனும் இருப்பின் வேலை நாட்களில் 044-25300306 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.

இரா. சுதன், இ.ஆ.ப.,

தேர்வுக்கட்டுப்பாடு அலுவலர்